 

# கனகராசா கருணாநிதி

கருணாநிதி:

எமது சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவனாக இருந்ததோடு தொடர்ந்தும் சங்கத்தின் நடவடிக்கைகளில் நிறையவே பங்கு கொண்டு அதன் வளர்ச்சிக்குக் கை கொடுத்தாய்.

அதுமாத்திரமன்றி உனது கலையுணர்வுகளைக் கவிதைகளிலும் விவாத அரங்கத்திலும் வெளிக்காட்டி நாடகங்களிற் கதாநாயகனாகவும், ஏன், சிலவேளைகளிற் கதாநாயகியாகவும் பாத்திரமேற்று நடித்து எமது கலைவிழாக்களுக்கு மெருகூட்டினாய்.

கிரிக்கட் போட்டிகளில் எங்கள் வீரர்கள் சிக்சர் அடிக்கும் போது ஒரு மூலையிலிருந்து உனது குடும்பத்தினருடன் சேர்ந்து நீ போடும் கரகோஷம் எங்கள் காதுகளில் என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

இப்படியொரு அத்தான் கிடைத்ததுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று உனது மைத்துனர்கள் வியந்து சொல்லுமளவுக்குப் பண்பாளனான நீ பதினாறு வயதுக் கட்டிளம் காளை போலத் துடிப்புடன் விஷயங்களைக் கூட்டங்களில் விவாதிக்கும் காட்சி எமது மனதில் என்றும் நிழலாடும்.

உன் பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் இந்தப் பூவுலகம் இருக்கும்வரை எங்கள் இதயங்களில் நீடித்து வாழும் என்பது நிச்சயம்.

என்றும் உனது பிரிவால் வாடி நிற்கும்
ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர்கள் கனடா/அமெரிக்கா
**Toronto, Ontario, March 26, 2006**

கருணாநிதியின் இதயத்திலிருந்து,

# ஹாட்லி

FIAT LUX

வங்கக் கடல் இதன்
வாசலில் மோதும்

வாடைக் காற்று வகுப்பறையில்
பாடம் கேட்கும்

கட்டிட சுவர்கள் எல்லாம்
கணிதம் செய்யும்

வளர்ந்து நிற்கும் மரங்கள் எல்லாம்
விஞ்ஞானம் போதிக்கும்

துரும்புகள் கூட துடுப்படிக்கும்
புல்லுகள் கூட 'புட்போல்' அடிக்கும்

சித்திரம் என்ன சிறுகதை என்ன
அத்தனையும் இங்கு அத்துப்படி

ஹாட்லியே உன் புகழை
வானமே அண்ணாந்து பார்க்கிறது.



கருணா.